# MAH05762

ஸ்ரீ :
ஹரி ஓம் :
இந்த யாதவாத்புதயமான இந்த க்ரந்தமானது ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகனால் இயற்றப்பட்டது. இது மொத்தம் 24 ஸர்க்கம் இருக்கு, 2641 ஸ்லோகங்கள் கொண்டது. இது இராமாயண, மஹாபாரத, பாகவதங்களுக்கலாம் அடிப்படையானது. ஒரு காவியம் அப்படினா அதுக்கு என்ன லக்ஷ்ணம்னா 18 ஸர்க்கங்கள் குறையாம இருக்கணும், இதுல 24 ஸர்க்கங்கள் இருக்கு. இராமாயணம், மஹாபாரதம், பாகவதத்த அடிப்படையா வெச்சு இருக்கணும். இதுல 3ம் சேர்ந்து இருக்கு. இது பாகவதத்த வெச்சு அடிப்படையா இருக்கறதுனால இது யாதவாத்புதயம். "வந்தே ப்ருந்தா வனசரம்" இதுல ப்ருந்தா அப்படினா கூட்டம் கூட்டமாக, கூட்டம் கூட்டமா இருக்கும் போது காப்பாத்தறது, ப்ருந்தாவன பகுதிக்கு பேரு சுகந்தவனம். ப்ருந்தாவனம் சுகந்தமா இருக்கு. ஏன் சுகந்தமா இருக்கு அப்படினு கேட்டா வேத சுகந்தமா இருக்கு, வேத சுகந்தம் ஏன்னா எம்பெருமான் இருக்கறபடியினாலே, பெருமாள் இருக்கற இடம் வேதம் இருக்கு, வேதம் பெருமாளோட மூச்சு காற்று தானே, அதுனால வேத சுகந்தம், சுகந்த வனம், ப்ருந்தாவனத்துக்கு இன்னொரு பெயர் சுகந்தவனம். இந்த ப்ருந்தாவனம் வடக்குல மதுராகிட்ட இருக்கு. "மதுரா பாக்யம் அநந்ய போக்ய மீடே" அப்படினு சொல்றார் ஸ்வாமி நிகமாந்த தேசிகன். மதுரா பாக்யம் பெற்றது, ஏன்னா பெருமாள் அங்கே ஏளினபடியினாலே. க்ருஷ்ணன் அவதாரம் பண்ணினதுனால மதுரா புண்ணியம் அடைந்தது. ஸ்ரீரங்கத்த ஏன் திவ்யக்ஷேத்திரம்னு சொல்றோம்னா எம்பெருமான் இங்க இருக்கறதுனால, எம்பெருமானோட சாந்நித்யம் இங்க இருக்கறதுனால, வைகுண்டத்துல இருக்கற பெருமாள் தான் இங்க இருக்கார், அதுனால நாம எல்லாம் பாக்கியம் பெற்றோம். இந்த ஸ்ரீரங்கமும் ஒரு ப்ருந்தாவனம் தான், ஏன்னா எம்பெருமான் க்ருஷ்ணனா இருக்கார். இங்க எம்பெருமானுக்கு 2 நக்ஷத்திரம் ரோகிணி, ரேவதி. மூலவருக்கு ரோகிணி நக்ஷத்திரம், உற்சவர்க்கு ரேவதி நக்ஷத்திரம். அப்ப மூலவர் க்ருஷ்ணன், மூலவர் எப்படி இருப்பார் கருப்பா தான் இருப்பார் கார்மேக ஷ்யாமளன், ஆகையினால ஸ்ரீரங்கமும் ப்ருந்தாவனம் தான். க்ருஷ்ணன் இருக்கற இடம் தான் சுகந்தவனம், அப்ப இந்த ஸ்ரீரங்கமும் சுகந்தவனம் தான். ஆகையினால ப்ருந்தம் அப்படினா கூட்டம்னு அர்த்தம். கூட்டத்தை காப்பாற்றிய இடம், எல்லாரையும் காப்பாத்தற இடம். இந்த இடத்துல எல்லாரையும் அப்படினா, அதுக்கு எல்லா ஜீவராசிகளையும்னு அர்த்தம். இங்க குறிப்பிட்டவாள சொல்லலை இந்த இடத்துல, ஏன்னா ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத் :, எம்பெருமான தவிர மத்த எல்லாத்தையும் காப்பாத்தறது யாரு அந்த எம்பெருமான் தான், ஆகையினால ப்ருந்தம் அப்படினா கூட்டம், கூட்டத்தை காப்பாற்றுபவன், கோப கூட்டத்தை காப்பாத்தற இடத்துக்கு பேரு. அப்ப ப்ருந்தாவனம்னா ஸ்ரீ வைகுண்டம்னு அர்த்தம். ஏன்னா வைகுண்டத்துல எம்பருமான் இருக்கார், அவர் தானே எல்லாரையும் காப்பாத்தறார், காப்பாத்தற இடம் எது வைகுண்டம், வைகுண்டம் புகுவது மன்னவர் விதியே. வைகுண்டம் போகணும்னா நம்ம என்ன பண்ணனும், ஒரு ஆச்சாரியன்கிட்ட போகணும், பஞ்ச சம்ஸ்காரங்கள் முடிந்த பிறகு ஆச்சாரியன் மூலமாதான் வைகுண்டம் போக முடியும், ஆச்சாரியன் கிட்ட பரண்யாஸம் பண்ணிண்ட பிறகு, பரண்யாஸம்னா இந்த ஜீவனை ஒப்படைக்கறது, இனி என்னால எதுவும் முடியாதுனு இந்த ஸரீரத்த அவன்கிட்ட ஒப்படைக்கறது. பக்தி மார்கத்தால மோக்ஷம் போகலாம், ஆனா அப்படி போறது ரொம்ப கஷ்டம். அதுனால தான் ஆச்சாரியனிடத்துல என்னால எதுவும் முடியலைனு நம்மள ஒப்படைச்சுட்டா அதாவது பரண்யாஸம் பண்ணிண்டு அவர் திருவடியை புடிச்சுண்ட்டா அந்த ஆச்சாரியனே எம்பெருமானிடத்துல நம்ம மோக்ஷத்துக்கு recommend பண்ணிடுவார். அப்ப எல்லாரும் வைகுண்டம் போகலாம். வைகுண்டத்துல யாரு இருப்பான்னா நம்ம உண்மையான அம்மா அப்பாவான எம்பெருமான் ஸ்ரீரெங்கனாதனும், தாயாரும் இருப்பா. இவா தான் இந்த

உல்கத்துக்கே அம்மா அப்பா. "மாதா தேவி தமஸி பகவான் வாசுதேவ பிதாமே" உன்னுடைய பர்த்தாவான வாசுதேவன் எனக்கு அப்பா, நீ தான் எனக்கு அம்மா, எனக்கு அதைகாட்டிலும் வேற என்ன பெருமை வேண்டியிருக்கு, தாயாரையும் பெருமாளையும் அம்மா அப்பாவா நினைக்கணும்னு சொல்றா. இந்த பிறவிக்கு அம்மா அப்பா இவா, ஆனா எற்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உந்தன்னோடுனு நம்மளோட எல்லா பிறவிக்கும் அந்த எம்பெருமானும் தாயாரும் தான் அம்மா, அப்பாவா இருந்து நம்மள காப்பாத்திருக்கா. அதுனால இந்த ஜென்மத்துல இருக்கற அம்மா அப்பாக்கு மட்டும் நம்ம விஸ்வாஸமா இருக்கறது நியாயமா, இந்த ஜென்மத்துல இருக்கற அம்மா அப்பாக்கு நம்ம விஸ்வாஸமா இருக்கோம், அப்ப எத்தனையோ ஜென்மமா நமக்கு அம்மா அப்பாவா இருந்து நம்மள காப்பாத்திருக்காளே, அப்பா அவாள மறக்கலாமா, அவா தான் நம்பெருமாளும், ஸ்ரீரங்க நாச்சியாரும். அப்ப இந்த ஜென்மத்துக்கான அம்மா அப்பா கிட்ட விஸ்வாஸம் இருக்கணும், எல்லா ஜென்மத்துக்கான அம்மா அப்பாவான நம்பெருமாள், ஸ்ரீரங்க நாச்சியார்கிட்ட மஹா விஸ்வாஸம் இருக்கணும். இந்த ஜென்மத்துல இருக்கற சொந்த பந்தங்கள்லாம் நம்மள காப்பாத்தலாம், காப்பாத்தாமலும் போகலாம், அப்படினா நம்மளை எல்லா ஜென்மத்துலையும் காப்பாத்தற அந்த எம்பெருமானும் தாயாரும் தான் நம்மளோட உண்மையான சொந்தம். அதுனால் நம்ம எல்லாரும் அவர் கிட்ட தான் போய் ப்ரார்த்திக்கணும். அப்ப ப்ருந்தம்னா கூட்டம், அவனம்னா காப்பாற்றுதல்னு பொருள். ஆக ப்ருந்தாவனம்னா கூட்டத்தை காப்பாற்றுதல்னு அர்த்தம். கூட்டமா யாரு இருக்கா அப்படினா எல்லாருமே கூட்டமா தான் இருக்கா. மனுஷா, சிங்கம், யானை, காடு, பறவை, எறும்பு எல்லாமே கூட்டம் கூட்டமா தான் இருக்கு. அப்ப யாரு தனியா இருக்கானு கேட்டா இந்த உல்கத்துல யாருமே தனியா கிடையாது. எல்லாருமே குடும்பம் குடும்பமா தான் இருக்கா. அப்ப எல்லாரையும் காப்பாத்தறது அந்த எம்பெருமானும் தாயாரும் தான். ஆனா அதை புரிஞ்சுக்காம மனுஷா எல்லாரும் பணம் பணம்னு அதையே தேடி தேடி அலஞ்சு கடைசில எது உண்மையான வஸ்துவோ அதை மறந்துட்றா. தங்கம், வெள்ளி, பணம், காசு எல்லாமே அநித்தியமான வஸ்து. அப்ப நித்தியமான வஸ்து எதுன்னா அது நம்ம நம்பெருமாளும் ஸ்ரீரங்க நாச்சியாரும் தான் நித்தியம். அவா தான் நம்ம எல்லாருக்குமே அழியாத நித்தியமான சொத்து. அப்ப இந்த உலகத்துல இருக்கற எல்லா அநித்தியமான சொத்துக்கள் எல்லாமே அவனுக்கு தான் சொந்தம் நம்ம ஜீவன் உள்பட. "ஸ்வஸ்மை சொப்ரீதையே ஸ்வயமேவ காரயதி", அப்ப நம்மளோட உண்மையான சொத்து அந்த எம்பெருமான் க்ருஷ்ணன் தான். அவன் தான் இந்த உலகத்துல இருக்கற எல்ல ஜீவராசிகளையும் ரக்ஷித்து காப்பாற்றுபவன். அப்படி காப்பாத்தற அந்த பகவான் மேல் நமக்கு மஹா விஸ்வாஸம் இருக்கணும். மஹா விஸ்வாஸம் எப்படி வரும், யாரு சொல்லி குடுப்பா அப்படினா, ஆச்சாரியன் தான் சொல்லி குடுப்பா. ஆச்சாரியன்னா யாருன்னு கேட்டா வேத சாஸ்திரங்களை அத்யயனம் பண்ணி, வேதத்துல உள்ளதான தாத்பர்யங்களை புரிஞ்சுண்டு, அந்த தாத்பர்யங்கள் மூலமாக அப்படியே நடந்துண்டு, தான் மட்டும் நடந்துண்டா போதாதுனு தன் சிஷ்யாளையும் அப்படியே நடக்கும் படியாக நடத்தி வெக்கறவர் யாரோ அவர் தான் ஆச்சாரியன். அப்படி தான் எல்லாரும் நடந்துண்டு இருக்கா. ஆச்சாரியன்னா யாரு, இந்த உலகத்த காப்பாத்தறவா, தர்மத்தை நிலைநாட்டக்கூடியவா, அந்த தர்மத்தை சொல்லி குடுக்கறவா தான் ஆச்சாரியன். ஆகையினால எம்பெருமானுடைய அனுபவங்களை பருகணும். கண்ணால் வாரிப் பருகி, கண்ணுக்கு கண்டவரும் சிந்தை கவரும் பெருமாள், நம்ம ரெங்கனை பார்த்தா நகர முடியுமா, ஏன்னா அவ்வளோ அழகு நம்பெருமாள். திருக்குறுங்குடி பெருமாளுக்கு ஒரு திருநாமம் உண்டு சுந்தர பரிபூர்ண வடிவழகிய நம்பி. சுந்தரம்னா அழகு அதுவும் பரிபூர்ணமான சுந்தரம், அந்த பரிபூர்ணமான சுந்தரத்தினுடைய வடிவு அப்படியே அக்காரம். பெருமாளினுடைய அக்காரம் எப்படி இருக்கும் சுந்தர பரிபூர்ண வடிவு அழகிய அத்புதமான் அழகுள்ள நம்பி. அந்த திருக்குருங்குடி பெருமாளும் நம்ம நம்பெருமாளும் பாக்கறதுக்கு ஒரே மாதிரி இருப்பா, இங்க

நம்பெருமாளுக்கு மாலை சாத்தறா மாதிரி அங்கையும் பெருமாளுக்கு ஒரே ஒரு மாலை தான் சாத்துவா. இங்க இருக்கற மாதிரி தான் வீதிகளும் அங்க இருக்கும். அதுனால அங்க எம்பெருமான் அவ்வளோ அழகா இருப்பாறாம். அதுனால எம்பெருமானுடைய க்ருபைக்கு பாத்திரமாகணும்னா, எம்பெருமானை தியானம் பண்ணனும், எம்பெருமானுடைய ஸ்தோத்திரங்களை சொல்லணும்.